# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2021

## வளர் தமிழ் 5

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. க் + ஒ ________________ .
( கொ, கெ, கோ )

2. மாமல்லன் என அழைக்கப்பட்டவன் ________________ .
( நரசிம்மபல்லவன், செங்குட்டுவன், அருண்மொழித்தேவன் )

3. பாம்பு சீறும். சிங்கம் ____________________ .
( உறுமும், கத்தும், முழங்கும் )

4. "வரப்புயர" என்று வாழ்த்திய புலவர் ________________ .
( ஔவையார், திருவள்ளுவர், கபிலர் )

5. ஆனிரை மேய்த்தல் ________________ நிலத்துக்குரிய தொழில்.
( குறிஞ்சி, முல்லை, நெய்தல் )

6. **குறள்:**
எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது ____________________
( உயர்வு, தெளிவு, அறிவு )

7. கல் + குகை என்பதைச் சேர்த்து எழுதினால் ______________ .
( கட்குகை, கற்குகை, கல்குகை )

8. காடுபடு செல்வங்களில் ஒன்று ________________ .
( அரிசி, ஆனைந்து, தேன் )

9. **பழமொழி:**

புலி பசித்தாலும் புல்லைத் ________________ .

( தின்னும், தின்னாது, தரும் )

10. ___________________ ஒன்றாகச் சேர்ந்து விளையாடுவோம்.

( நாங்கள், நீங்கள், அவன் )

11. ________________ வணிகத்துறையில் மன்னார் புகழ்பெற்று விளங்கியது.

( முத்து, இரும்பு, செம்பு )

12. வளி என்பது __________________ .

( கரை, வானம், காற்று )

13. அம்மா எனக்கு _________________ கதைகள் கூறுவார்.

( கணீர்கணீர், நல்லநல்ல, அக்கம்பக்கம் )

14. சிலப்பதிகாரத்தை எழுதியவர் _________________ .

( ஔவையார், இளங்கோவடிகள், திருவள்ளுவர் )

15. கூத்து, நட்டம், நடம் என அழைக்கப்பட்ட கலை ____________ .

( இசைக்கலை, ஆடற்கலை, ஓவியக்கலை )

16. ஆறுமுகநாவலர் _________________ நூற்றாண்டில் வாழ்ந்தார்.

( 20 ஆம், 19 ஆம், 18ஆம் )

17. ஒலிம்பிக் கொடியில் ________________ வளையங்கள் உள்ளன.

( ஐந்து, இரண்டு, ஆறு )

18. காகத்தினால் கூடு ________________.

( கட்டப்பட்டது, கட்டியது, கட்டுகின்றது )

19. ________________ கொடி புலிக்கொடி ஆகும்.

( சேரரது, சோழரது, பாண்டியரது )

20. வயலும் வயல் சார்ந்த இடமும் ________________ .

( குறிஞ்சி, முல்லை, மருதம் )

21. மன்னார் ஈழத்தின் ________________ த் திக்கில் அமைந்துள்ளது.

( வடமேற்கு, கிழக்கு , தெற்கு )

22. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல் ________________ .

( வாகை, தோகை, பாலை )

23. விளையாட்டுகள் உடல் வலுப்பெற ________________ .

( உதவுகின்றது, உதவுகின்றார்கள், உதவுகின்றன )

24. தமிழரின் பண்பாட்டைக் கூறும் நூல் ________________ .

( சிலப்பதிகாரம், புறநானூறு, அழகின்சிரிப்பு )

25. எலி ________________ வாழும்.

( வலையில், வளையில், வழையில் )

26. பறவைகள் ________________ ப் பறந்தன .

( கண்ணுங்கருத்துமாக , சாரிசாரியாக , கூட்டங்கூட்டமாக )

27. இசை நடனம் சிற்பம் ஓவியம் நாடகம் என்பன ____________ .

( இன்கலைகள், ஆனைந்து, இசைக்கருவிகள் )

28. உணவுப்பொருட்களை உற்பத்தி செய்பவர் ________________.

( உழவர், குயவர், நெசவாளர் )

29. வெற்றி என்பதன் எதிர்ச் சொல் ________________ .

( பகை, வேற்றுமை, தோல்வி )

30. தமிழரின் மரபு விளையாட்டுகளில் ஒன்று ________________ .

( காற்பந்தாட்டம், கிளித்தட்டு, வலைப்பந்தாட்டம் )

புள்ளிகள் 30

## 2) அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக மாற்றி எழுதுக.

1. உழவர் __________________ அச்சாணி போன்றவர்கள்.

   ( உலகு )

2. வன்னி மக்கள் __________________ துன்பப் படுகின்றனர்.

   ( வறுமை )

3. தாமரை __________________ க் கண்டு மலரும்.

   ( கதிரவன் )

4. இனியன் __________________ வயலுக்குச் சென்றான்.

   ( அம்மா )

5. தாய்ப்பறவை __________________ உணவு கொடுத்தது.

   ( குஞ்சுகள் )

புள்ளிகள் 10



TEDC

3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. மக்களைக் கவரும் விந்தையான விலங்குகள் எங்கே காணப்படுகின்றன?

______________________________

______________________________

2. தமிழ்நாட்டில் பல்லவ மன்னர்களால் வரையப்பட்ட சிறந்த ஓவியங்கள் எங்கே காணப்படுகின்றன?

______________________________

______________________________

3. பாவேந்தர் எழுதிய நூல் ஒன்றின் பெயரைத் தருக.

______________________________

______________________________

4. வண்டி இழுப்பதற்குப் பயன்படும் விலங்கு எது?

______________________________

______________________________

5. திருக்கேதீச்சுரம் எந்த ஆற்றங்கரையில் அமைந்துள்ளது?

______________________________

______________________________

6. தொலைத்தொடர்புக் கருவிகள் இரண்டு தருக.

______________________________

______________________________

7. இளங்கோவடிகளின் தந்தையின் பெயர் என்ன?

______________________________

______________________________

புள்ளிகள் 10

**4) கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து; கவிதையை முழுமையாக்குக.**

## உழவர்

| | | |
|---|---|---|
| உழுது | காத்து | பூட்டி |
| உணவு | தருபவர் | |

உண்ண ________________ தந்திடும்
உழவர் வாழ்க வாழ்கவே

வயலை ________________ பயிர்களை
வளர்க்கும் உழவர் வாழ்கவே

ஒன்றை நூறு நெற்களாய்
உண்டு பண்ணித் ________________

நன்கு உழுது வியர்வையால்
நனைந்து போக உழைப்பவர்

கண்ணைப் போல பயிர்களைக்
________________ உயிர்கள் காப்பவர்

ஏர் ________________ உழுபவர் - என்றும்
ஏற்றம் கண்டு மகிழ்பவர்.

புள்ளிகள் 10

5) **மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| விரும்புவர் | ஆசிரியரை | கோவிலும் |
| நல்ல | வேண்டும் | |

நாங்கள் என்றும் நல்ல பிள்ளைகளாக வாழ ________________ . நல்ல பழக்கவழக்கங்கள் உள்ளவர்களையே நல்ல பிள்ளைகள் எனக் கூறுவர். பெற்றோர் சொற்கேட்டல், ________________ மதித்தல், மூத்தோரை மதித்தல், உண்மை பேசுதல், பிறருக்கு உதவுதல் போன்றன நல்ல பழக்கவழக்கங்கள் ஆகும். நல்ல பிள்ளைகளை எல்லோரும் ________________ . ஆசிரியரும் பெற்றோரும் எமக்கு ________________ பழக்கவழக்கங்களைக் சொல்லித்தருகின்றனர். அம்மாவே எமது முதல் ஆசிரியர். எனவே தான் தாயிற் சிறந்ததொரு ________________ இல்லை என்று எம் முன்னோர் கூறியுள்ளனர்.

புள்ளிகள் 10

**6) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

**செஞ்சிலுவைச் சங்கம் ஓர் உதவி நிறுவகம். இச்சங்கம் இன்று உலகமெங்கும் இயங்கி வருகிறது. நாட்டின் எல்லைகளைக் கடந்து துன்புற்றோருக்கு உதவுகிறது. கொடிய நோய்களுக்கு உள்ளான ஏழை மக்களுக்கு மருத்துவம் அளிக்கிறது. இது வறுமையில் வாடும் நாடுகளில் உள்ள மக்களுக்கு உணவளித்துக் காக்கிறது. போரினால் துன்புறும் மக்களுக்கு விரைந்து உதவுகிறது. செஞ்சிலுவைச்சங்கம் தன் முத்திரையாகச் சிவப்புச் சிலுவையைக் கொண்டுள்ளது. செஞ்சிலுவைச் சங்கம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொடக்கப்பட்டது. இது போரில் காயமுற்றோரைக் காப்பாற்றவென கென்றி டுணன்ற் என்பவரால் சுவிற்சலாந்தில் தோற்றுவிக்கப்பட்டது.**

1. **எது ஓர் உதவி நிறுவகம்?**

___________________________________

2. **செஞ்சிலுவைச் சங்கம் யாருக்கு உணவளித்துக் காக்கிறது?**

___________________________________

___________________________________

3. **எதனால் துன்புறும் மக்களுக்கு விரைந்து உதவுகிறது?**

___________________________________

4. **செஞ்சிலுவைச் சங்கம் எத்தனையாம் நூற்றாண்டில் தொடக்கப்பட்டது?**

___________________________________

___________________________________

5. **செஞ்சிலுவைச் சங்கம் தன் முத்திரையாக எதைக் கொண்டுள்ளது?**

___________________________________

புள்ளிகள் 10

## 7) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. வாழைப்பழத் ________________ மஞ்சள் நிறமுடையது.
   ( தோள் , தோல் )

2. சங்கிலியனின் சிலை ________________ அமைந்துள்ளது.
   ( யாழ்ப்பாணத்தில், யாழ்ப்பானத்தில் )

3. வானத்தில் ________________ பறந்தது.
   ( பறவை, பரவை )

4. தம்பி ________________ செய்து விளையாடினான்.
   ( பனிப்பாவை, பணிப்பாவை )

5. கனிந்த பழங்கள் மரத்திலிருந்து ________________ .
   ( விலுந்தன , விழுந்தன, )

புள்ளிகள் 05

TEDC

**8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ நோயற்ற வாழ்வு
- ✸ இளங்கோவடிகள்
- ✸ பறவைகள்
  - ➢ பறவைகளின் பெயர்கள்
  - ➢ வாழும் இடங்களும் உணவுகளும்
  - ➢ பறவைகளினால் கிடைக்கும் நன்மைகள்
  - ➢ உமக்குப் பிடித்த பறவை எது? ஏன்?

புள்ளிகள் 15

TEDC